I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No. 5/2023 நாள் : 15.09.2025</u>

<u>வா.சா.1– திரு. பூலோகப் பாண்டியன்.</u>

**முதல் விசாரணை :–**

நான் 3ம் வாதி. பிராது தபசில் சொத்தின் கூடுதல் விஸ்தீரணம் பூலைய்யாத்தேவர் மற்றும் கூட்டுப்பட்டாதாரர் பெயரிலுள்ள செட்டில்மெண்ட்டின் அ பதிவேடு நகல் **வா.சா.ஆ 1**. பிராது தபசில் சொத்துக்கான 1ம் வாதியின் மாமியார் பெயரிலுள்ள அ பதிவேடு நகல் **வா.சா.ஆ 2**. 27.07.2011 தேதியிட்ட பிராது தபசில் சொத்துக்கான 1ம் வாதியின் மாமியார் மற்றும் 1ம் வாதியின் கணவர் பெயரிலுள்ள கூட்டுப்பட்டா கணினி நகல் **வா.சா.ஆ 3**. 04.11.2013 தேதியிட்ட 1ம் வாதியின் கணவரின் இறப்பு மற்றும் வாரிசுச் சான்றிதழ் அசல் **வா.சா.ஆ 4 மற்றும் 5**. தூத்துக்குடி தாலுகா, மறவன்மடம் கிராமம், புல எண் 130/1பி3 க்கான புல வரைபடம் நகல் **வா.சா.ஆ 6**. மேற்படி புல எண்ணுக்கான தோராய வரைபடம் நகல் **வா.சா.ஆ 7**. 22.11.2022 தேதியிட்ட பிராது தபசில் சொத்துக்குரிய வில்லங்கச் சான்றிதழ் நகல் **வா.சா.ஆ 8.** 26.12.2022 தேதியிட்ட பிராது தபசில் சொத்துக்குரிய வில்லங்கச் சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ 9**. 20.07.2022 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள மோசடி கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 10.** 23.12.2022 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள மோசடி கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 11**. 26.11.2022 தேதியிட்ட தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் 1ம் பிரதிவாதி மீது நான் கொடுத்துள்ள புகார் மனு நகல் **வா.சா.ஆ 12**. 26.11.2022 தேதியிட்ட மேற்படி புகார் மனுவிற்கு வழங்கப்பட்டுள்ள மனு ரசீது அசல் **வா.சா.ஆ 13**. 26.11.2022 தேதியிட்ட புதுக்கோட்டை

சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் கொடுத்துள்ள தடங்கல் மனு நகல் **வா.சா.ஆ 14**. 28.07.2021 தேதியிட்ட பிராது தபசில் சொத்திற்கு பூலைய்யாத்தேவரின் சகோதரர் காசிராஜாத் தேவர் பெயரிலுள்ள நத்தம் பட்டா நகல் **வா.சா.ஆ 15**. 10.04.1973 தேதியிட்ட பிராது தபசில் சொத்துக்கு 1382ம் பசலி ஆண்டுக்கான 1ம் வாதியின் மாமியார் மற்றும் கணவர் பெயரிலுள்ள பட்டாவுக்கான ஜமாபந்தி சிட்டா நகல் **வா.சா.ஆ.16**. ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.09.15 16:52:27 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.